# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 379/2025**

**Prosecution witness : ம.சா. 1** **Date : 31.10.2025.**

| Name : மதியழகன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused absent petition filed and allowed )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) என் வயது என்னவென்றால் 48 வயதாகும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எத்தனை வருடமாக பயணிகள் ஆட்டோ ஓட்டுகிறேன் என்றால் சுமார் 20 வருடமாக ஓட்டி வருகிறேன். ஆட்டோ என் சொந்த வாகனமாகும். பதிவு சான்று என் பெயரில் உள்ளதா என்றால் என் பெயரில் தான் உள்ளது. எதிரி தற்போது எங்கு பணிபுரிகிறார் என்றால் சிப்கோவில் தீயணைப்பு துறையில் பணியில் உள்ளார். எதிரி உறவினரா என்றால் இல்லை.

2) ஆட்டோ வாடகைக்கு எடுக்க வரும் போது பழக்கம் என்றால் ஆமாம். நெருங்கிய பழக்கம் எதுவும் இல்லை என்றால் ஆமாம். ஆட்டோ ஓட்டுவரை தவிர நான் சேலம்கேம்ப பகுதியில் வட்டி வியாபாரம் தொழில் செய்து வருகிறேன் என்றால் அவ்வாறு இல்லை. கந்து வட்டி தொழில் அந்த பகுதியில் உள்ள நபர்களுக்கு ரூ.10/–க்கு வட்டிக்கு கொடுத்து வருகிறேன் என்றால் இல்லை. அதிகபட்சமாக ரூ.10,000/– முதல் ரூ.20,000/– வரை கந்து வட்டி கொடுத்து 10 வருடமாக தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை.

3) இதற்கு முன்னர் எத்தனை முறை எதிரிக்கு பணம் கைமாத்தாக கொடுத்து வாங்கியுள்ளேன் என்றால் மாதம் 2ம் தேதி வந்து ரூ.5000/– பெற்று சம்பளம் வாங்கி கொடுத்துவிடுவார். இந்த அளவிற்கு தான் வரவு செலவு இருந்தது

என்றால் ஆமாம். எதிரிக்கும் எனக்கும் கைமாற்று வரவு செலவு ரூ.5000/-, ரூ.10,000/- அளவிற்கு இருக்கும் என்றால் ஆமாம்.

4) எனக்கு ஆட்டோ ஓட்டும் தொழில் தவிர வேறு தொழில் உள்ளதா என்றால் இல்லை. ஆட்டோ ஓட்டும் தொழில் வருமானம் எவ்வளவு வரும் என்றால் ரூ.500/- முதல் ரூ.1000/- வரும், வராமலும் இருக்கும். சராசரியாக ரூ.600/- முதல் ரூ.800/- வரை வாடகைக்கு வரும். பராமரிப்பு செலவு போக ரூ.300/-, ரூ.400/- எனக்கு கைக்கு நிற்கும் என்றால் சரிதான்.

5) எனக்கு சொந்த வீடு உள்ளது. எனக்கு திருமணம் ஆகவில்லை. நான் தனியாக வசித்து வருகிறேன். எனக்கு சாப்பாடு என் அம்மா செய்து கொடுப்பார். என் தேவைக்கான செலவுகளுக்கு என் அம்மாவிற்கு எவ்வளவு பணம் கொடுப்பேன் என்றால் கையில் இருக்கும் போது கொடுப்பேன். ரூ.10,000/- கையில் இருந்தால் கொடுப்பேன்.

6) எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் Central Bank of India ஆர்.எஸ் கிளையில் உள்ளது. வேறு வங்கி கணக்கு எனக்கு இல்லை. எத்தனை வருடமாக வரவு செலவு வைத்துள்ளேன் என்றால் 10 வருடமாக வைத்துள்ளேன். எனக்கு செலவு போக மீதம் எவ்வளவு கையிருப்பு இருக்கும் என்றால் மாதம் ரூ.5000/- இருக்கும்.

7) செந்தில் எனக்கு என்ன உறவு என்றால் தம்பி. அவர் டிரைவராக உள்ளார். என் தம்பி ராமன் நகர் பகுதியில் சொந்தமாக கார் வைத்து ஓட்டி வருகிறார். அவருக்கு திருமணம் ஆகி குடும்பத்துடன் உள்ளார். செந்தில் ராமன் நகர் பகுதியில் அவர் நண்பர்களுடன் சேர்ந்து காமதேனு பைனான்ஸ் நிதி நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது.

8) எதிரியை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 20 வருடமாக தெரியும். எதிரியின் குடும்ப விவரம் தெரியுமா என்றால் மனைவி இல்லை. 2017 ம் வருடம் நவம்பர் மாதம் எதிரிக்கு அவசர பணத்தேவை காரணமாக என் தம்பி செந்தில் மூலமாக காமதேனு பைனான்சில் ரூ.20,000/- பணத்தை வட்டிக்கு கடனாக வாங்கினார் என்றும் அந்த பைனான்ஸ் நடைமுறை என்று சொல்லி

எதிரியிடம் கையெழுத்துமட்டும் போட்ட காசோலை மற்றும் புரோ நோட்டில் என் சகோதரரர் பெற்று பைனான்சில் ரூ.3 வட்டிக்கு பணம் பெற்றுக் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) பைனான்சில் கொடுத்த காசோலை ஸ்டாட் பாங்க் ஆப் இந்தியா .2018 ஏப்ரல், மே மாதத்தில் வட்டியுடன் சேர்த்து பணத்தை கொடுத்துவிட்டார் என்றும் பாதுகாப்பிற்காக கொடுத்த காசோலையை மற்றும் புரோநோட்டை எதிரி வாங்க தவறிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2018 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ஓமலூர் புளியம்பட்டி பகுதியில் நடந்த சாலை விபத்தில் எதிரிக்கு கொடுங்காயம் ஏற்பட்டு கோமா நிலைக்கு சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10) ஈரோடில் உள்ள Be well மருத்துவமனையில் சேர்த்து மூன்று மாதம் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை பெற்று வெளியே வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி வந்த பின்னிட்டு 2018 டிசம்பர் மாதம் ஏடிஎம் கார்டு விபத்து சமயம் தொலைந்து விட்டது என்றும் எனவே எதிரி வங்கி கணக்கை முடித்து கொடுக்கும்படி கடிதம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

11) வங்கியில் பரிசீலனை செய்து கணக்கை முடித்து கொடுக்கும்படி சொன்னதன் நம்பிக்கையின் பேரில் எதிரி வந்து விட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இன்றைய தேதி வரை எதிரி உடல் நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் 300 அடி தூரம் இருக்கும். எதிரியை நான் பார்த்து வருவதால் அவர் நல்ல முறையில் தான் உள்ளார். தினம் என் ஆட்டோ ஸ்டாண்டு தாண்டி வேலைக்கு செல்வார். நான் அவரை பார்த்து கொண்டு தான் இருக்கிறேன்.

12) எதிரி செப்டம்பர் 2024 ம் வருடம் ரூ.20,000/- ரூ.10/- வட்டிக்கு வைத்திய செலவிற்காக கடன் வாங்கி அதற்கு மாதம் ரூ.2000/- வட்டி கட்டி வந்தார் என்றால் இல்லை. 2025 பிப்ரவரி மாதம் வரை வட்டி கட்டிவிட்டு உடல் நிலை

சரியில்லாத காரணத்தால் வட்டி செலுத்த தவறினார் என்றால் அவ்வாறு இல்லை. பணம் கொடுத்த தேதி 25.05.2025 ம் தேதியாகும்.

13) பணம் கொடுப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு வந்து என்ன காரணம் சொல்லி பணம் கேட்டார் என்றால் மூன்று நாட்களுக்கு முன்பு வீட்டு செலவிற்கு வேண்டுமென்று ஒரு மாதத்தில் திருப்பி தருவதாக சொல்லி பணம் கேட்டார். கைமாற்றாக பணம் கேட்டார். எந்த ஆதாரத்தை வைத்து திடீரென ரூ.4,00,000/- கொடுத்தேன் என்றால் என்னிடமிருந்து சிறுக சிறுக வண்டி வாங்க சேர்த்து வைத்திருந்த பணத்திலிருந்து கொடுத்தேன்.

14) நான் போன் செய்து எதிரியை வரசொல்லி கொடுத்தேனா என்றால் எதிரியே வீட்டிற்கு வந்து கேட்டார். இருதரப்பிலும் யார் யார் இருந்தார்கள் என்றால் நாங்கள் இருவர் மட்டுமே இருந்தோம். காசோலையை நான் கேட்டேனா எதிரியாகவே கொடுத்தாரா என்றால் அதிகப்படியான தொகை என்பதால் நான் காசோலையை பாதுகாப்பிற்காக கேட்டேன். என் முன்னிலையில் தான் காசோலை முழுவதையும் பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் ஆமாம். பூர்த்தி செய்து கையெழுத்தும் போட்டு கொடுத்தார்.

15) தற்போது என்னிடம் காட்டப்படும் காசோலையை தான் எதிரி கொடுத்தார். எதிரி கொண்டு வந்திருந்த பேனாவால் அவராகவே பூர்த்தி செய்து கொடுத்தார். சாட்சியிடம் காசோலையை காட்டி பூர்த்தி செய்த பேனா ஒரு மையினாலும், கையெழுத்து ஒரு மையினாலும் உள்ளது என்றால் ஒரே மையினால் தான் உள்ளது. வெவ்வேறு மையினால் வெவ்வேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றும் நான் பூர்த்தி செய்ததால் தான் வெவ்வேறு மையினால் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல.

16) வங்கியிலிருந்து எடுத்த பணத்தை எங்கு வைத்திருந்தேன் என்றால் வங்கியில் இல்லை சேமித்த பணத்தை வீட்டில் வைத்திருந்தேன். எதிரி பணம் என்னிடம் கேட்ட ஒரு மாதத்திற்கு முன்னர் நல்ல உடல் நிலையில் இருந்தார் என்றால் ஆமாம். நான் நேரடியாக எதிரியை நல்ல உடல் நிலையில் இருந்ததை பார்த்தேன் என்றால் ஆமாம். எதிரியை காளிங்கராயன் பாளையத்தில் உள்ள

ராஜஸ்ரீ தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்து சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு 16.05.2023ம் தேதி தான் விடுவிக்கப்பட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

17) நான் சொன்ன 25.05.2025ம் தேதி வரைக்குமே அலுவலகத்தில் தொடர் விடுப்பிலிருந்து ஓய்வில் இருந்தார் என்றும் வெளியே வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வட்டி பணத்தை 5 மாதமாக தராததால் வீட்டிற்கு வந்து பணத்தை வட்டியும், அசலும் கேட்டு தொந்தரவு கொடுத்தேன் என்றால் இல்லை. எதிரியின் மனைவி என்னிடம் 5 மாதம் அவகாசம் கேட்டு கூட நான் என் தம்பி செந்திலுடன் சேர்ந்து எதிரியிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்தேன் என்றால் சரியல்ல.

18) பணம் தரமாட்டார் எதிரிக்கு ஏதாவது ஆகிவிடும் என்பதால் நான் என் தம்பியிடம் எதிரி கொடுத்த காசோலையை தவறுதலாக பயன்படுத்தி ரூ.4,00,000/- பூர்த்தி செய்து எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி 25.05.2025ம் தேதி கைமாற்று பணம் பெறவில்லை என்றும் வழக்கு காசோலையை எதிரி எனக்கு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 25.06.2025ம் தேதி வசூலுக்கு செலுத்தினேன்.

19) எதிரியிடம் 25.06.2025ம் தேதியில் பணம் வசூலுக்கு வங்கியில் செலுத்துவதற்கு முன்பாக இருப்பிடத்திற்கு 300 அடி தொலைவில் உள்ள எதிரியிடம் பணம் கொடுத்து காசோலை பெற்றுக் கொள் என்று கூறினேனா என்றால் இல்லை. 30.06.2025ல் வங்கியில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. நான் அலுவலக முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம்.

20) சிப்கோ அலுவலகத்திற்கு அனுப்பிய முகவரியில் Addressee absent என திருப்பப்பட்டது என்றால் ஆமாம். எதிரி அறிவிப்பை பெறாததால் உண்மை விவரத்தை சொல்லி எனக்கு பதில் கொடுக்க வாய்ப்பில்லாமல் போனது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 25.05.2025ம் தேதி எதிரி உடல் நிலை சரியில்லாத சூழ்நிலையில் என்னிடம் நேரில் வந்து பணம் பெற்றிருக்க

வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி என்னிடம் ரூ.4,00,000/- பணம் வாங்கியிருந்தால்வைத்திய செலவிற்காக கேட்டிருப்பார் என்றும் குடும்ப செலவு என்று நான் சொல்வது பொய்யான காரணம் என்றால் சரியல்ல. எதிரியின் வங்கி கணக்கு எங்குள்ளது என்றால் சேலம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவாகும்.

21) 2018 டிசம்பர் மாதம் எதிரி அவருடைய வங்கிக்கு கணக்கை முடிக்க சொல்லி கடிதம் கொடுத்துள்ள நிலையில் எதிரி வங்கி நிர்வாகத்தில் கணக்கை முடிக்காமல் வைத்திருந்து தவறுதலாக சரிவர பரிசீலனை செய்யாமல் exceeds arrangements என்று வங்கியால் திருப்பப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தரப்பு சாட்சியாக என் வங்கி, அவர் வங்கியை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

22) இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத இந்தியன் வங்கி , கரூர் வைசியா வங்கி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. எனக்கு ரூ.4,00,000/- எதிரிக்கு ரொக்கமாக கொடுக்க போதிய பண வசதி வாய்ப்பு இல்லை என்றும் எனக்கு தகுதி இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனவே நான் சட்டப்படி செல்லுபடியாகக்கூடிய கடனுக்கு கொடுத்த காசோலை பணமாகாமல் திரும்பினால் மட்டுமே காசோலை வழக்கு தாக்கல் செய்ய இயலும், இந்த வழக்கு காசோலையானது எதிரி என்னிடம் பணம் பெறாத கடனுக்காக பாதுகாப்பிற்காக கொடுத்த காசோலையை என் தம்பி செந்திலுடன் சேர்ந்து எதிரியை அச்சுறுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.